www.freetnbooks.com

| அரையாண்டுத் தேர்வு - 2025 | தேர்வு எண் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| காலம் : 3.00 மணி | XI - தமிழ் | மதிப்பெண் : 90 | | | | |

பகுதி - 1

குறிப்பு: 1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **(14x1=14)**

2) ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. மொழிமுதல் எழுத்துக்களின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க
   அ) அன்னம், கிண்ணம்
   ஆ) டமாரம், இங்ஙனம்
   இ) ரூபாய், இலட்சாதிபதி
   ஈ) றெக்கை, அங்ஙனம்

2. உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே என்று பாடியவர் ______
   அ) திரு.வி.க. ஆ) பாரதியார்
   இ) நாமக்கல் கவிஞர் ஈ) பாரதிதாசன்

3. மண்ணுக்கு வளம் சேர்ப்பன ______
   அ) மண்புழு ஆ) ஊடுபயிர்
   இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்

4. ஒப்புரவு என்பதன் பொருள் ______
   அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது
   இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது

5. காவடிச்சிந்தின் தந்தை என்று அழைக்கப்படுபவர் ______
   அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார்
   இ) முருகன் ஈ) பாரதியார்

6. Touch Screen என்பதன் தமிழாக்கம் ______
   அ) பிழை ஆ) அரசிதழ்
   இ) தொடுதிரை ஈ) மானியம்

7. பிள்ளைக்கூடம் கவிதை இடம்பெற்ற நூல்
   அ) வடக்கு வீதி ஆ) கொடி விளக்கு
   இ) தகப்பன் கொடி ஈ) சுட்டுவிரல்

8. கல்வி அழகே அழகு என்று எடுத்துரைக்கும் நூல் ______
   அ) புறநானூறு ஆ) திருமந்திரம்
   இ) ஆத்திசூடி ஈ) நாலடியார்

9. ஏமம் என்பதன் பொருள் ______
   அ) பாதுகாப்பு ஆ) அறிவு
   இ) மதி ஈ) பூமி

10. கெடுக என்பதன் இலக்கணக் குறிப்பு ______
    அ) பெயரெச்சம் ஆ) வினையெச்சம்
    இ) வினைமுற்று ஈ) வியங்கோள் வினைமுற்று விகுதி

11. பதிற்றுப்பத்தில் இரண்டாம் பத்தின் பாட்டுடைத் தலைவன் ______
    அ) குமட்டூர்க் கண்ணனார் ஆ) இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்
    இ) பரணர் ஈ) உருத்திரங்கண்ணனார்



www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com

12. ஒரே நண்பன் என்ற சிறுகதையின் ஆசிரியர் ______
அ) ஜெயகாந்தன் ஆ) புதுமைப்பித்தன்
இ) கு.அழகிரிசாமி ஈ) நாமக்கல் கவிஞர்

13. 'ஜனப்பிரளயம்' என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல்லைத் தேர்க
அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை
இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை

14. அதிசய மலரின் புன்னகை உணர்த்துவது
அ) நம்பிக்கை ஆ) பெருமிதம்
இ) புகழ் ஈ) அச்சம்

## பகுதி - 2

### பிரிவு - 1

***குறிப்பு: எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.*** ***(3x2=6)***

15. இனம், மொழி குறித்து இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.
16. 'ஐங்குறுநூறு' - குறிப்பு வரைக.
17. மருந்து எது? மருந்து மரமாக இருப்பவர் யார்?
18. மதினா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.

### பிரிவு - 2

***குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.*** ***(2x2=4)***

19. தமிழ்நாட்டின் மாநிலமரம் - சிறுகுறிப்பு வரைக.
20. சங்ககாலத்தில் தமிழ்மொழியின் நிலைபற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது?
21. 'நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்' என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.

### பிரிவு - 3

***குறிப்பு: எவையேனும் ஏழனுக்கு விடை தருக.*** ***(7x2=14)***

22. அலர்ந்து - பகுபத உறுப்பிலக்கணம் தருக.
23. ***சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.***

    பிண்ணாக்கு

24. ***ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக.***

    1) அரும்பொருள்

    2) நீரோடை

25. ***ஏதேனும் ஒன்றனுக்கு இலக்கணக்குறிப்பு தருக.***

    1) ஆழ்க

    2) பேரன்பு

26. ***மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.***

    1) குரை

    2) குறை



www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com

27. *விடுபட்ட இடத்தில் அடுத்து வரவேண்டிய சொற்களைக் கண்டறிந்து எழுதுக.*

1) எழுத்து, சொல் ______ யாப்பு ______

2) எழுத்து ______ சீர், தளை, ______ தொடை.

28. பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?

29. *பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.*

முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமல் போவாது

30. *பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.*

1) வாடகை 2) மாதம்

3) போலீஸ் 4) சம்பளம்

## பகுதி - 3

### பிரிவு - 1

*குறிப்பு: எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.* *(2x4=8)*

31. குறித்த காலத்திற்கு முன்பாக ஊர் திரும்பிய தலைவன் கூறுவனவற்றை ஐங்குறுநூறு கொண்டு விளக்குக.

32. தமிழ்பண்பாட்டின் ஓர் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.

33. பகைத்திறம் தெளிதல் குறித்துத் திருக்குறள் கூறும் கருத்துகள் யாவை?

34. "ஊனமில் ஊக்கமும் ஒளிரக் காய்த்தநல

தீன்னனுஞ் செல்வமே பழுத்த சேனகர்"

- இப்பாடலடிகளில் ஒளிரக் காய்த்தது எது? பழுத்தது எது?

### பிரிவு - 2

*குறிப்பு: எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.* *(2x4=8)*

35. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.

36. திராவிடப் பழங்குடிகளின் இனக்குழுப் பெயர்களுக்கும் மலைக்கும் உள்ள தொடர்பிற்கு எடுத்துக்காட்டுத் தருக.

37. சமணப் பள்ளிகளும் பெண் கல்வியும் - குறிப்பு வரைக.

38. கல்வியால் நீ அடைந்த சிறப்புகளைப் பத்து வரிகளில் எடுத்துரைக்க.

### பிரிவு - 3

*குறிப்பு: எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.* *(3x4=12)*

39. அ) சொற்பொருள் பின்வருநிலையணியை விளக்குக.

*(அல்லது)*

ஆ) தீயினால் சுட்டபுண், உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு

*- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.*

40. *தமிழாக்கம் தருக.*

1) The pen is mighter than the sword.

2) A picture is worth a thousand words.

3) Work while you work and play. While you play.

4) Knowledge rules the world.



www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com

41. ***இலக்கிய நயம் பாராட்டுக. மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக.***

*பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி*
*பேணி வளர்த்திடும் ஈசன்*
*மண்ணுக்குள்ளே சில மூடர் - நல்ல*
*மாதர் அறிவைக் கெடுத்தார்*
*கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி*
*காட்சி கெடுத்திட லாமோ-*
*பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்*
*பேதமை யற்றிடும் காணீர்*

- பாரதியார்

42. 'தா' என்ற வேர்ச்சொல்லை வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம் வினையாலணையும் பெயராக மாற்றித் தொடரமைத்து எழுதுக.

43. ***அடைப்புக்குள் உள்ள ஆக்கப் பெயர் விகுதிகளைக் கொண்டு விடுகதைகளுக்குரிய ஆக்கப்பெயர்களைக் கண்டறிந்து எழுதுக.***

1) வேவு பார்த்திடுவான்; ஓசையின்றிச் சென்றிடுவான். (ஆளி)
2) வந்தால் மகிழ்ச்சி இது; உழைத்தால் கிடைக்கும் இது. (மானம்)
3) அறிவைத் தேடிப் போகுமிடம்; உலகம் அறிய உதவுமிடம். (அகம்)
4) அளந்து அளந்து கொட்டிடுவான்; அகம் மகிழத் தந்திடுவான்.(ஆள்)

## பகுதி - 4

***குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் இரு பக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்கவும் .***

***(3x6=18)***

44. அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.

***(அல்லது)***

ஆ) 'தாம்' வாழ்ந்த காலகட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர்' என்பதை நிறுவுக.

45. அ) பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

***(அல்லது)***

ஆ) "அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்" - இக்கூற்றை முப்பால்வழி விளக்குக.

46. அ) 'யானை டாக்டர்' - குறும்புதினம் வெளிப்படுத்தும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

***(அல்லது)***

ஆ) சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத் தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்து எழுதுக.

## பகுதி - 5

47. ***அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.*** ***(4+2=6)***

அ) 'அம்ம வாழி தோழி நம்மூர்ப் '...............

- எனத் தொடங்கும் குறுந்தொகை பாடல்.

ஆ) 'பகை' - என முடியும் திருக்குறள்.



www.freetnbooks.com | FREETNBOOKS